# கிருபையுள்ள வார்த்தை ®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 18 | July ஜுலை | 2017

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| இரண்டு வழிகள் | 3 |
| கிறிஸ்துவின் பிரமாணம் | 5 |
| எசேக்கியேல் | 8 |
| நீங்கள் அறியவேண்டிய.. | 10 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை

**6** மணி முதல் **6-30** மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.










**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**

P.O.Box 15, Arasaradi,

Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

**நித்திய வழியில் நடத்தும் சத்திய வார்த்தை**

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol. 91**

ஆசிரியர் உரை

# இரண்டு வழிகள்

P.C. பிலேமோன் ராஜா



பிரியமானவர்களே !

உங்கள் யாவருக்கும் ஜீவ வழியாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தனது மலைப்பிரசங்கத்திலே இரண்டு வழிகளைக் குறித்து பேசினார். 'வழி' என்பது நாம் நடப்பதற்கான ஒன்று. இந்த இரண்டு வழிகளில் நிச்சயம் ஏதேனும் ஒன்றில் நாம் நடந்தே ஆக வேண்டும். மேலும் இயேசு, பல வழிகளைப்பற்றி சொல்லாமல், இரண்டே வழிகளைப்பற்றி பேசுகிறார். ஒன்று நெருக்கமானது, மற்றொன்று விசாலமானது. மேலும், இயேசு குறிப்பிடாத ஒரு புதிய வழியில் எவரொருவரும் செல்ல எந்த வாய்ப்பும் இல்லை. ஒருவரால் ஒரு வழியில் தான் செல்ல முடியும்; இரண்டிலுமே பயணிக்க முடியாது. இரண்டு வழிகளுமே, நேர் எதிரான இரண்டு திசைகளை அல்லது இலக்குகளை நோக்கி செல்பவையாக உள்ளன. இவ்வளவு முக்கியமான வழிகளைப்பற்றி நாம் ஆழமாக பார்ப்போம்.




## 1. விசாலமான வழி

இந்த வழியைப்பற்றியும், அதனுடைய நிலையைப் பற்றியும், அதில் யாரெல்லாம் செல்கிறார்கள் என்பதைப் பற்றியும் நாம் தியானிப்போமென்றால், நாம் இந்த வழியில் செல்லலாமா? நமக்கு அது நன்மை பயக்குமா? என்று நாம் முடிவெடுக்க பயனுள்ளதாயிருக்கும். இந்த வழியைப்பற்றி வேத வசனம் நல்ல விளக்கம் கொடுக்கிறது. **மத்தேயு 7:13 "...கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்."**

இது பிசாசு காட்டுகின்ற வழியாயிருக்கிறது. இந்த வழியில் நம்மை எப்படியாவது அழைத்து சென்றுவிட வேண்டும் என்று, பிசாசானவன் கெர்ஜிக்கிற சிங்கம் போல நம்மை சுற்றித்திரிகிறான். அதனால்தான் கர்த்தருடைய வார்த்தை நம்மை எச்சரிக்கிறது.

**1 பேதுரு 5:8 "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்".** பிசாசு காட்டுகின்ற வழி என்ன ? அது எப்படிப்பட்டது ? பிசாசு காட்டுகின்ற வழி, தேவனில்லாத வாழ்வு: அது விசுவாசமில்லாத ஒரு வாழ்வு: மேலும் அது தேவனுடைய வார்த்தையின்படி வாழாத ஒரு வாழ்வாகும். மனிதனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழியினுடைய வாழ்வாக அது இருக்கிறது. மேலும், **கலா 5:19–21**ன்படி, அது தேவனுடைய வழிக்கு முற்றிலும் எதிர்புறமான வழியாக இருக்கிறது. விசாலமான வழி என்பது கேட்டுக்கு போகிறது என்று இயேசு சொன்னார். மாமிசத்தின் படி நடக்கிறவர்கள் கேட்டுக்கு போகிறவர்களாக இருக்கிறார்கள்.

கொலை, விபச்சாரம், வெறி, அசுத்தம், காமவிகாரம், துரோகம், துர்இச்சை, பண ஆசை, களியாட்டுகள் என்று வசனத்தில் வரிசையாக பட்டியலிடப்படுகிறது. இந்த மாதிரி குணம் நிறைந்தவர்கள் எல்லாம் சத்துருவானவனாலே வஞ்சிக்கப்பட்டு, இழுக்கப்பட்டு, அவன் காட்டுகின்ற வழியிலே செல்லுகிறவர்களாக இருக்கிறார்கள். இதனுடைய ஆரம்பம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். 'நான் மாத்திரமா இதை செய்கிறேன்? எத்தனையோ பேர் செய்கிறார்கள்!' என நமக்கென்று ஒரு கூட்டத்தை அடையாளப்படுத்தி, நாம் நியாயம் கற்பித்திக்கொண்டிருப்போம். இந்த வழியை கண்டுபிடிப்பவர்கள் அனேகராயிருக்கிறார்கள்.



**1 கொரி 6:9–10 "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள், வேசிமார்க்கத்தாரும்,**

விக்கிரகாராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும், தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்திரப்பதில்லை". இங்கே ஒரு பெரிய பட்டியல் இடம் பெறுகிறது. தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள்ளே போக விரும்புகிறவர்களால், நிச்சயமாக இந்த இருளின் ராஜ்ஜியமாகிய சாத்தானின் ராஜ்ஜியத்திற்குள்ளே, அதாவது, விசாலமான பாதையிலே செல்ல முடியாது. ஆகவே, நம்மிடம் இந்த குணங்கள் எல்லாம் இருக்கின்றனவா என சோதித்தறிய வேண்டும்.

## 2. இடுக்கமான வழி

இரண்டாவதாக உள்ள வழியைப் பற்றி வேதம் கூறும்போது, **மத்தேயு 7:14** "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது: அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்". இந்த வழியிலே வருவதற்கு சில கட்டுப்பாடுகள் உள்ளது. **மாற்கு 16:15–16**ன்படி, இந்த பாதையில் நம் இஷ்டப்படி நடக்க முடியாது. இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்து, கடந்த கால பாவத்தை விட்டு மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெற்றவர்கள் தான் இந்த பாதையில் பிரவேசிக்க முடியும். இந்த பாதையிலுள்ள பாதுகாப்பு என்ன? **அப் 2 : 47**ன் படி கிறிஸ்து தன்னுடைய சபையில் சேர்க்கிறார். இந்த பாதை நமக்கு கொடுப்பது என்ன? கிறிஸ்துவின் ஒரே சரீரமான சபையின் ஐக்கியத்தையும், பாதுகாப்பையும் நமக்கு கொடுக்கிறது. சபைக்குள்ளே இருக்கிறவர்கள் பாதுகாப்பாக இருக்க, புதிய ஏற்பாட்டின் உபதேசத்தின்படி வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இதுவே பாதுகாப்பான இடம் என்பதையும் வேதம் நமக்கு அடையாளம் காட்டுகிறது.



**வெளி 2:10** "நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே: இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாக உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்".

ஒரு வேளை இந்த இடுக்கமான பாதையில் ஆரம்பித்து விட்டு, தொடர்ந்து இதிலே செல்வதில் சில சிக்கல்கள் இருக்கிறது என்று பின்வாங்கிப் போகலாமா என்கிறீர்களா? மரணமே வந்தாலும் சத்தியத்தின்படி நடக்க வேண்டுமே தவிர, சத்தியத்தை விட்டுவிட்டு வாழக்கூடாது. வேதம் நம்மை மரண பரியந்தம் உண்மையாயிரு என்கிறது.

சத்தியத்திற்காக இழப்பதை, இறப்பதை இவர்கள் (இடுக்கமான வழியில் செல்பவர்கள்) விரும்பகூடியவர்களாக இருந்து, நித்திய ஜீவனை பெறும்படியாக தங்களை ஆயுத்தப்படுத்திக்கொள்வார்கள் என்பதை வேதம் நமக்கு தெளிவாக அடையாளம் காட்டுகிறது. **(பிலி 1:21; 3:7, 11)**

இந்த இடுக்கமான பாதையின் வழியே செல்வதின் விளைவு என்ன? "இங்கே ஜீவ விருட்சம் இருக்கிறது". அந்த விசாலமான பாதையின் வழியே செல்வதின் விளைவு என்ன? "அங்கே கேடு, மரணம், தண்டனை, அழிவு இருக்கிறது''. இடுக்கமான பாதையில் நாம் நித்திய ஜீவனை பெற முடியும். நாம் வாழ்ந்திருக்க முடியும். இது எப்போது சாத்தியம்? **யாக் 1:12** "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமமென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்."

பிரியமானவர்களே!

நாம் இந்த இரண்டு பாதையில், ஏதாவது ஒன்றில் கட்டாயமாக செல்ல வேண்டும். இந்த இரண்டு பாதையை தவிர்த்து வேறு பாதை இல்லை. ஜீவனுக்குண்டான, தேவ சித்தப்படி செய்கின்ற பாதையா? அல்லது, அழிவுக்கு வழிநடத்துகிற விசாலமான பாதையா? மாம்சத்தின் கிரியைகளை அழிக்கிறோமா? அல்லது மாம்சத்தின்படி நடக்கிறோமா? என்று நம்மை நாமே கேள்வி கேட்டு, நித்திய ஜீவனை பெறும்படி ஞானமுள்ள, ஆசீர்வாதமுள்ள புதிய ஏற்பாட்டின் உபதேசத்தின்படி வாழ்ந்து, ஜீவ கிரீடத்தை பெற தேவன் கிருபை செய்வாராக! ஆமென்.

# பாடம் : 3 கிறிஸ்துவின் பிரமாணம்

Jerry Bates



நியாயப் பிரமாணத்திற்கென்று ஒரு நோக்கமிருந்தது என்றும், அந்த ஒரு நோக்கம் நிறைவேறின பிறகு, அது கடந்து போகக்கூடியதாக இருந்தது என்றும் பாத்தோம். மத்தேயு 5:17,18ல், இயேசு, "நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." என்று சொன்னார். இயேசுவின் வார்த்தைகளுக்கு அநேகர் மாற்று விளக்கத்தைக் கொடுக்க விரும்புகின்றனர். எனவே அவர்கள், நியாயப்பிரமாணத்தை எடுத்துப் போடுவதற்கல்ல, (கைவிடுவது) அதை நிறைவு செய்வதற்கே இயேசு வந்தார் என்கின்றர். ஆகிலும், ஏதோ ஒன்றின் நோக்கம் நிறைவேறிவிடுமானால், அதை ஏன் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்க வேண்டும்?

இயேசு சொன்னதைக் கவனியுங்கள். அவர் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுமளவும், நியாயப் பிரமாணத்தின் எந்த ஒரு பகுதியும் அழிந்து போவதில்லை; அது ஒரு முறை நிறைவேறிவிடுமானால், அது அழிந்து போகும், என்றே கூறுகிறார். இப்படியாக, இயேசு ஒரு முறை முற்றிலுமாக நியாயப் பிரமாணத்தை, சிலுவையிலே நிறைவேற்றிவிடுவாரெனில், பிறகு நியாயப்பிரமாணமும் அழிந்து போகும். இயேசு தாம் மரிப்பதற்கு சற்று நேரத்திற்கு முன்பாகத்தான், ஒரு எளிமையான வார்த்தையில், "எல்லாம் முடிந்தது" என்று சொன்னார் (யோவான் 19:30). இயேசு நிறைவேற்றும்படி வந்த சகலகாரியங்களும் செய்து முடிக்கப்பட்டது; அவை நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவது, மனிதனுடைய பாவங்களுக்காக பாவபலியாவது, மேலும் ஒரு சிறப்பான உடன்படிக்கையை ஸ்தாபிப்பது.

எப்படியிருப்பினும், நமக்கு ஒரு புதிய பிரமாணம் இருப்பதால், பழைய பிரமாணம் நமக்குப் பயனற்றது என நாம் நினைத்துவிடக்கூடாது. அது நமக்கு தொடர்ந்து சில போதனைகளைக் கொடுக்கிறது. ரோமர் 15:4ல் பவுல், "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது". அதாவது, நமக்குப் தேவனைக் குறித்தும், பாவத்தைக் குறித்தும், கிறிஸ்துவின் வருகை, பலிகள் போன்ற அனைத்தையும் குறித்தும், பல வருடங்களுக்கு முன்பு யூதர்களுக்குப் போதித்தது போலவே, நமக்கும் போதிக்கிறது. பழைய ஏற்பாடு இல்லாமல் புதிய ஏற்பாட்டின் அநேக பகுதிகளை நம்மால் புரிந்து கொள்ள இயலாது. இப்படியாக, இன்னமும் நாம் கற்றுக்கொள்வதற்கு பயனுள்ளதாயிருக்கிறது. ஆகிலும், நாம் என்ன செய்ய வேண்டுமென்றோ, தேவனுக்கு நாம் செய்கிற சேவையில் எவைகளைப் பயன்படுத்த வேண்டுமென்றோ எந்தவொரு அதிகாரமும் பழைய ஏற்பாடு நமக்கு இன்று அளிப்பதில்லை. நாம் இனியும் பழைய பிரமாணத்தின் கீழ் இருப்பதில்லை; ஏனெனில், அது பழைய உடன்படிக்கையின் ஒரு பகுதி.

இயேசு, புதியதும் சிறந்ததுமான ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தும்படி வந்தார். இயேசு சிலுவையில் மரித்தபோது, பழைய பிரமாணத்தை அவர் சிலுவையில் ஆணியடித்தார் (கொலோ 2:14). அதே வேளையில், அவர் ஒரு புதிய பிரமாணத்தை ஏற்படுத்தினார். "ஏனென்றால் எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்த சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும். அவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லை. அந்தப்படி முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டைப் பண்ணப்படவில்லை," (எபிரேயர் 9:16–18). எபிரேய எழுத்தாளர், கிறிஸ்து மரிக்க வேண்டியிருந்ததின் அவசியத்தைக் காட்டும்படி ஒரு உதாரணமாக இதைப்

ஒருவர் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஆம் ! நாம் ஒரே நேரத்தில் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கும், கிறிஸ்துவிற்கும் கீழ்படிய முடியாது. (மத் 6:24; கலா 5:4)

பயன்படுத்துகிறார். மனிதர்கள் பெரும்பாலும் தனது ஆஸ்திகள் எப்படிப் பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென குறிப்பிடும் பொருட்டு, ஒரு உயிலையோ அல்லது ஏற்பாட்டையோ எழுதி வைப்பார்கள். ஆகிலும் அந்த மனிதன் மரித்தாலொழிய அதற்கு மதிப்பில்லை; பின்னதாக (அவன் மரிக்கும் வரை) தான் விரும்பும் எந்த மாற்றத்தை வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் தனது உயிலின் முந்தின காரியங்களை எடுத்து விட்டு, புதிய முறைகளை எழுதிக்கொள்ளலாம். அதேபோல்தான், கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை, அதை ஏற்படுத்திய அவருடைய மரணம் சம்பவிக்கும்வரை அமலுக்கு வரவில்லை. தமது புதிய உடன்படிக்கையை பிரதிஷ்டை செய்யும்படி தமது இரத்தத்தை அவர் சிந்தினார்; அது மோசேயின் பிரமாணம், கால்நடைகளின் பலிகளைச் செலுத்தி இரத்தஞ்சிந்தி பிரதிஷ்டை செய்தது போலத்தான். இப்படியாக, சிலுவையிலே புதிய உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டது; அது பழைய பிரமாணத்திற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டது. இயேசு ஒரு மேலான உடன்படிக்கையினை உறுதி செய்பவரானார் (எபிரேயர் 8:22)

இந்த புதிய உடன்படிக்கை பழைய பிரமாணத்துடன் சேர்க்கப்பட்டதல்ல; இது அதற்குப் பதிலாக கொடுக்கப்பட்டது. புதிய உடன்படிக்கை என்று சொல்லப்படுவதன் உண்மையே, பழையது ஒழிந்து விட்டது என்ற பொருளைக் கொடுக்கிறது. "புதிய உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழைமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது," (எபிரேயர் 8:13) "இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு (அவர்) முதலாவதை நீக்கிப் போடுகிறார்" (எபிரேயர் 10:9). இரண்டு கட்டளைகளுக்கும் நாம் கீழ்ப்படிய இயலாது. பாடத்தில் நாம் பார்த்தபடி, நாம் இப்பொழுது கிறிஸ்துவுக்குக் கீழான விசுவாசத்தில் இருக்கிறோம், ஆதலால், இனியும் நாம் உபாத்திக்கு (ஆயாவுக்கு) கீழானவர்களல்ல; இந்த உபாத்தி, பழைய பிரமாணம் (கலாத்தியர் 3:25): நாம் புதியதைப் பெற்றும், மீண்டும் பழையதுக்குபோய் நம்மை இணைத்துக்கொள்ள விரும்பமாட்டோம்.

கலாத்தியர் 5:4ல், "நியாயப்பிரமாணத்தினாலே நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" என்று பவுல் எழுதினார். நாம் கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டவர்கள் (எபேசி 2:8), இருந்தும் பழைய பிரமாணத்தைக் கைக்கொள்ள நாம் முற்படும்போது, நாம் கிருபையினின்று விழுந்து விடுகிறோம் என்று பவுல் திட்டவட்டமாக குறிப்பிடுகிறார். ஆதலால், நமக்கு இரட்சிப்புக்கென இருக்கிற ஒரே வழியை இழக்க வேண்டியதாகிவிடும். ஒருவருடைய எதிர்பார்ப்பின்படி, இந்த புதிய பிரமாணம் பழையதைக்காட்டிலும், மிக அதிகமான மகிமையுள்ளதும், மேன்மையானதுமாகும். மோசேயின் மூலம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது, அது மிகவும் மகிமை நிறைந்ததாகத்தானிருந்தது; அவனுடைய மகிமையை இஸ்ரவேல் புத்திரரும் நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தது (2 கொரிந்தியர் 3:7). "ஒழிந்து போகிற மகிமையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?" (II கொரி 3:8). இந்த வசனப் பகுதியில், ஒழிந்து போகிற ஊழியம் என்பது கற்பனைகளில் எழுதப்பட்ட ஊழியம்; அதாவது, பத்து கட்டளையாகும். மேலும் எபேசியர் 2:15ல், "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி," என்று பவுல் அறிவித்தார். இரண்டு வசனப் பகுதிகளிலும் கவனித்துப் பார்ப்போமானால், பழைய பிரமாணம் ஒழிக்கப்பட்டது அல்லது அழிக்கப்பட்டது என்பதற்கான தெளிவான வாக்கியத்தைக் காணுகிறோம்; இது பத்துக்கட்டளைகளையும் உட்படுத்தியது.

குறைவுள்ளதாக ஒரு நியாயப்பிரமாணத்தை, அதுவும் தேவையான பாவமன்னிப்பைக் கொடுக்கக்கூடாத பிரமாணத்தை, தேவன் கொடுக்கவேண்டிய அவசியமென்ன? நியாயப் பிரமாணம் தன்னில் தானே குறைவுள்ளதல்ல; அது எதற்காகத் திட்டமிடப்பட்டதோ அதைச் செய்தது, அது பாவத்தைக்குறித்த மனசாட்சியையும், மனுஷர்களை கிறிஸ்துவிடம் வழி நடத்தவும் ஆகிய கிரியைகளைச் செய்தது. நியாயப்பிரமாணத்தில் பிரச்சனை இல்லை;

**பழைய பிரமாணம் ஒழிக்கப்பட்டது, அழிக்கப்பட்டது என்பதன் பொருள், அந்த சட்டதிட்டங்கள் அமுலிலிருந்து நீக்கப்பட்டது என்பதே! மாறாக அதை வேதாகமத்திலிருந்து நீக்கிப்போடுவது அல்ல. (ரோ 15:4, எபே 2:15)**

பிரச்சனையெல்லாம் பெலவீனமும் பாவமும் நிறைந்த மனுஷன்தான். அவனால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளக் கூடாதிருந்தது.

பழைய பிரமாணம் எடுக்கப்பட்டு போனபடியால், இன்று நம்முடைய மார்க்க சம்மந்தப்பட்ட காரியங்களுக்காக பழைய பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்கு நாம் மறுபடியும் போக இயலாது. நியாயப்பிரமாணத்தின் எந்தப்பகுதியும் இன்று அமலில் இல்லை. இன்று மார்க்க சம்பந்தமான அநேக செயல்பாடுகள் அதிகாரம் இல்லாமல் (அங்கீகரிக்கப்படாமல்) செய்யப்படுகின்றன. ஏனெனில், அவர்களின் செயல்களுக்கு பழைய ஏற்பாடு மட்டுமே அங்கீகாரமளிக்கிறது. இதில் ஆசாரித்துவம் (பாதிரியார்களின் ஆசரிப்பு முறை), தசமபாகம், ஏழாம்நாள் ஆசரிப்பு மற்றும் இசைக்கருவிகளின் பயன்பாடு ஆகியன உட்பட்டவை. இன்று செய்யக்கூடாதவை இதனால்தான் கால்நடைகளை இன்று பலியிடுவதில்லை. நாம் விரும்புகிற எந்த கட்டளையை புதிய உடன் படிக்கைக்குள் கொண்டு வருவது என்று தெறிவு செய்து செயல்பட முடியாது. நாம் ஒரு கட்டளையை கை கொண்டாலும், முழுப் பிரமாணத்தையும் கைக்கொள்ள கடனாளிகளாயிருக்கிறோம் (கலா 5:3). நாம் பழைய ஏற்பாட்டின் எந்த ஒரு பிரமாணத்தையும் கைக்கொள்ள வேண்டுவதில்லை; ஏனெனில், புதிய பிரமாணமே மிகவும் உயர்ந்ததாயிருக்கிறது. அடுத்தப் பாடத்தில் அந்த உயர்வான காரியங்களில் சிலவற்றை விவாதிப்போம்.

> பழைய பிரமாணத்தை தேவன் வேண்டாமென கிறிஸ்துவின் மூலம் நீக்கிப்போட்ட பின்பும், அதை வேண்டும் என அடம்பிடிப்பதும் தேவனுக்கு எதிரான செயலாகும். (ரோமர் 10:2; எபி 10:9)

## ராபர்ட் கால்டுவெல் (1814 - 1891)

**பொதுவான செய்திகள்**



- இவர் திராவிட மொழியியலின் தந்தை எனப் போற்றப்படுபவர்.
- திராவிட மொழிகளின் தனித்துவத்தை நிலைநிறுத்தியதில் பெரும்பங்கு இவருடையது.
- இவர் ஆங்கில மொழியில் ஆக்கிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூல், உலகெங்கும் இவருக்கு மிகுந்த புகழ் ஈட்டித்தந்தது.
- தமிழ் மொழி உலகின் மொழி என்றும்; மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் எல்லாம், தமிழ் மற்றும் பிற மொழி கலப்பில் வந்தது என்றும் கண்டுபிடித்தார்.
- குமரி முனைக்குத் தென்பால் உள்ள பெருநாட்டில் முதன் முதல் தோன்றி வாழ்ந்த நன்மக்களே ஒரு காலத்தில் இந்திய நாடெங்கும் பரவிய தமிழர் ஆவர்.
- தமிழரை வடமொழியாளர் திராவிடர் என்று அழைத்தனர்.
- தகவல் சேகரிப்புக்காகச் சங்க இலக்கியங்களின் ஏட்டுப் பிரதிகளைப் படித்தது மட்டுமன்றி, அகழ்வாய்வுகளில் ஈடுபட்டுப் பல பண்டைய கட்டிடங்களின் அடிப்படைகளையும், ஈமத் தாழிகள், நாணயங்கள் முதலானவற்றையும் வெளிக் கொணர்ந்துள்ளார். மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பாண்டிய நாட்டுக் காசுகள் பல இவ்வாய்வுகளில் கிடைத்துள்ளன.
- இந்த ஆய்வுகளின் பெரும் பேறாக " திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறு" (A Political and General History of the District of Tinnevely) என்னும் நுலை எழுதினார். இது 1881 ஆம் ஆண்டில் மதராசு அரசினால் வெளியிடப்பட்டது.
- கால்டுவெல் இயற்றிய தமிழ் நூல்கள் : நற்கருணை தியான மாலை (1853), தாமரைத் தடாகம் (1871), ஞானஸ்நானம், நற்கருணை மற்றும் பரதகண்ட புராதனம்.

# தொடர் 21 எசேக்கியேல் : நாடு கடத்தப்பட்டிருத்தலின் தீர்க்கத்தரிசி

வாசிக்க வேண்டிய அதிகாரங்கள் : 1-5, 8, 9, 11, 12, 14, 16, 18, 20, 22, 24, 28, 33, 34, 36, 37, 40, 43, 47, 48.

## தலைப்பு

எசேக்கியேலின் புத்தகம் அதன் எழுத்தாளரின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது (1:3). "எசேக்கியேல்" என்றால் "தேவன் பெலப்படுத்துவார்" என்று அர்த்தப்படுகிறது.

## பின்னணி

எசேக்கியேல் கி.மு. 597ல், இரண்டாம்முறை சிறைப்பிடித்துப் போகப்படுதலில் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார். அவர் நாடு கடத்தப்பட்டிருந்தவர்களுடன் "கேபார் நதியண்டையில்" குடியிருந்தார் (1:1, 2), இது ஒருவேளை, ஐப்பிராத்து நதியிலிருந்து பிரிந்த ஒரு பெரும் வாய்க்காலாக இருக்கலாம். அவர் சிறையிருப்பிலிருந்து யூதர்கள் மத்தியில் பிரசங்கித்த வேளையில், தானியேல் (இவர் கி.மு. 605ல் பிடித்துக்கொண்டு போகப்பட்டவர்) அரண்மனையில் ஊழியம் செய்தார். எசேக்கியேலும் தானியேலும் அனேகமாக ஒருவரையொருவர் நன்கு அறிந்திருக்கலாம் (14 : 12, 20; 28:3).

தீர்க்கதரிசி என்ற வகையில் எசேக்கியேல், இரு பணிப்பொறுப்புகளைக் கொண்டிருந்தார் : (1) எருசலேமின் அழிவுக்கு முன்னர், அவர் மட்டுமீறிய தன்னம்பிக்கையுடன் போரிட வேண்டியிருந்தது. நாடு கடத்தப்பட்டவர்களின் தன்னம்பிக்கையானது, மூன்று விஷயங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது; அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாராக இருந்தனர், தாவீதின் சந்ததியாரில் ஒருவர் இன்னமும் அரியணையில் வீற்றிருந்தார், மற்றும் தேவனுடைய ஆலயம் இன்னமும் நின்றிருந்தது. (2) நகரத்தின் அழிவுக்கு பின்பு, அவர் மட்டும்மீறிய பெருவருத்தத்துடன் போரிட வேண்டியிருந்தது.

எசேக்கியேல் பல்வேறு வகையான உதவிப் பொருட்களை போதனைக்குப் பயன்படுத்தினார். தேவன் அடிக்கடி எசேக்கியேலை நடக்கவிருக்கும் ஒன்றிற்கு செயல்படும்படி கூறினார்; இந்த அடையாளத்துவச் செயல்பாடுகளில், பல எசேக்கியேலுக்குத் தனிப்பட்ட வகையில் கடினமான தாயிருந்தது. தரிசனங்கள் என்பவையே இப்புத்தகத்தின் மிகக்கடினமான பகுதிகளாக இருந்தன. ஒரு தரிசனத்தின் விவரங்களில் ஈடுபாடுகொண்டு, அதன்மூலம் முன்வைக்கப்படும் கருத்தின் மீதான பார்வையை இழந்து போகுதல் என்பது சுலபமானதே. ஒவ்வொரு தரிசனத்தையும் அடிப்படை சத்தியத்தின் மனோரம்மியமான கண்ணோட்டமாக நினைத்துப் பாருங்கள்.

## வரைகுறிப்பு

### I. எருசலேமின் அழிவுக்கு முன்னதாக : நியாயத்தீர்ப்பின் பிரசங்கியார் (1-24).

அ. நாடுக்கடத்தப்பட்டிருத்தலின் ஐந்தாம் ஆண்டு (1-7)

1. எசேக்கியேலுக்குத் தரப்பட்ட ஊழியக்கட்டளை (1-3).
2. எருசலேமின் அழிவு முன்னுரைக்கப்பட்டது (4 -7).

ஆ. நாடுகடத்தப்பட்டிருத்தலின் ஆறாம் ஆண்டு (8-19).

1. எசேக்கியேல் தரிசனத்தில் எருசலேமுக்குப் பயணமாகுதல் (8-11).
2. உண்மையற்ற மனைவியைக்கொண்டு கூறப்பட்ட ஒப்புவமை (16).

இ. நாடுகடத்தப்பட்டிருத்தலின் ஏழாம் ஆண்டு (20-23); இஸ்ரவேல் மற்றும் யூதர் ஆகியோரின் பாவங்கள்.

ஈ. நாடு கடத்தப்பட்டிருத்தலின் ஒன்பதாம் ஆண்டு (24).

1. முற்றுகை தொடங்குகையில், எசேக்கியேலின் மனைவி இறக்கின்றாள்.
2. எசேக்கியேல் ஊமையாகின்றார்.

### II. முற்றுகையும் அழிவும் : நாடுகளுக்கு எதிராக தீர்க்கதரிசனங்கள் (25-32).

அ. நாடுகடத்தப்பட்டிருத்தலின் பன்னிரெண்டாவது

நாம் நமது சொந்த பாவங்களுக்கும், அவற்றின் விளைவுகளுக்கும் வேறொருவரைக் குற்றம்சாட்ட முடியாது (எசே 18:3,4,19,20).

ஆண்டு (33-39 ; 32:17; 33:21 ஆகிய வசனங்களைக் கவனிக்கவும்).

1. ஊழியக்கட்டளை புதுபிக்கப்பட்டது (33); எருசலேம் வீழ்ந்திருந்தது என்ற செய்தி வருகிறது.

2. இஸ்ரவேலின் மேய்ப்பர்கள் மீதான குற்றச்சாட்டுகள் (34).

3. நாட்டில் மீண்டும் குடியேற வேண்டியதாக, நாடு உயிர்ப்பிக்கப்பட வேண்டியதாக இருத்தல் (36, 37).

ஆ. நாடுகடத்தப்பட்டிருத்தலின் இருபத்தி ஐந்தாம் ஆண்டு (40-48) ; தேவாலயம் மீண்டும் கட்டப்படுதல் பற்றிய தரிசனம்.

## எசேக்கியேலின் புத்தகத்தில் இருந்து பாடங்கள்:

எசேக்கியேலின் புத்தகம், பிரசங்கியாருக்கு இருக்கிற இருமடங்குப் பணிப்பொறுப்பைக் காண்பிக்கிறது: (1) துன்புற்றிருப்பவர்களுக்கு ஆறுதல் அளித்தல் மற்றும் (2) வசதிமிகுதியால், ஆண்டவரை மறந்து இருப்பவர்களை, ஆண்டவருடைய வசனத்தை உணர்த்தி துன்புறுத்தல்.

தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிப்பவர்களும் போதிப்பவர்களுமாயிருக்கிற நமக்கு, ஒவ்வொருவரையும் மனம்மாற்றும் பொறுப்பு இருப்பதில்லை; ஆனால் தேவனுடைய செய்தியை உண்மையுடன் அறிவிக்கும் பொறுப்பு உள்ளது **(3:17).** நாம் அவ்வாறு செய்யும் போது, நமது உரையை கேட்பவர்கள் நேர்மறையான வகையில் பதில்செயல் செய்தாலும் செய்யாவிட்டாலும், நாம் நமது பொறுப்பை நிறைவேற்றுகின்றோம் **(3:18–21; 33:7–9).**

மனிதர்கள் என்ற வகையில், நாம் நமது பிரச்சனைகளுக்குப் பிறரைக் குற்றம்சாட்ட விரும்புகின்றோம். சிலர் தங்களின் சுற்றுச்சூழலைக் குற்றம்சாட்டுகின்றனர். மதவியலாளர்கள், மனிதக்குலப் பிரச்சனைகள் யாவற்றிற்கும், அடிக்கடி ஆதாமைக் குற்றம் சாட்டுகின்றனர். இஸ்ரவேல் மக்கள் தங்கள் முன்னோர்களைக் குற்றம்சாட்டினர் **(18:2).** இருப்பினும், வேதாகமம், தனிப்பட்ட பொறுப்புகளைப் போதிக்கிறது ; நாம் நமது சொந்த பாவங்களுக்கும் அவற்றின் விளைவுகளுக்கும் வேறொருவரைக் குற்றம்சாட்ட முடியாது **(18:3,4,19, 20).**

எசேக்கியேல் புத்தகத்தில் உள்ள, கள்ளத் தீர்க்கதரிசிகள் பற்றிய வசனப்பகுதிகள் **(34:11–31),** இன்றைய நாட்களில் உள்ள தேவனுடைய மேய்ப்பர்கள் (மூப்பர்கள்) யாவராலும் வாசிக்கப்பட வேண்டிய பகுதியாக உள்ளது **(1 பேதுரு 5:1–3).** இன்றைய நாட்களில் இயேசுவே பிரதான மேய்ப்பராக இருக்கின்றார் **(யோவான் 10:8–11; எபிரேயர் 13:20; 1 பேதுரு 2:25; 5:4).**

தேவாலயம் பற்றிய தரிசனம் **(40–48)** செருபாபேல் அல்லது ஏரோது ஆகியோரால் கட்டப்பட்ட தேவாலயத்தைக் குறிப்பதில்லை; எசேக்கியேலின் தரிசனத்தில் உள்ள கட்டமைப்புபோல் அந்தக் கட்டமைப்பு இருக்கவில்லை. அந்த அதிகாரங்கள் எதிர்காலத்தில் ஒரு ஆயிரம் ஆண்டு ஆட்சிக்காலம் பற்றிய திட்டப்படத்தைத் தருவதும் இல்லை; இந்தக் காலகட்டத்தில் மிருகங்களைப் பலி செலுத்தல் இன்னமும் நடைமுறையில் இருந்தது; தேவனுடைய மக்களாகிய சபையார், தேவன் வாசம்பண்ணும் இடமாக, அல்லது தேவாலயமாக இருக்கின்றனர் **(1 கொரிந்தியர் 3:16).** இந்தத் தீர்க்கதரிசனம் இயேசுவின் ஆவிக்குரிய பலியையும் **(எபிரேயர் 9:11–15, 23–28)** கிறிஸ்தவர்களின் ஊழியத்தினுடைய ஜீவபலியையும் **(ரோமர் 12:1)** குறிப்பிடுகிறது.

## சிறுவர்க்கான கேள்விகள்

1. ஸ்தேவான் என்பவர் சபையில் செய்த பணி என்ன?
2. இயேசுவை பற்றி போதிக்கும் போது, ஸ்தேவானை மக்கள் என்ன செய்தனர்?
3. மரிக்கும் வேளையிலும் ஸ்தேவான் என்ன செய்தார்?
4. யெரொபெயாம் என்பவன் யார், அவனை அரசனாக்கியது யார்?
5. அவன் செய்த பாவம் என்ன?
6. அதினால் கிடைத்த தண்டனை என்ன?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-08-2017

# நீங்கள் அறியவேண்டிய சில உண்மைகள்

## புதிய ஏற்பாட்டில் சபை, பின்வருமாறு அழைக்கப்படுகிறது :

| | | |
|---|---|---|
| தேவனுடைய ஆலயம் | : | 1கொரி 3:16 |
| தேவ குமாரனுடைய ராஜ்யம் | : | கொலோ 1:13 |
| தேவனுடைய வீடு | : | 1தீமோ 3:15 |
| தேவனுடைய சபை | : | 1கொரி 1:2 |
| முதற்பேறானவரின் சபை | : | எபிரேயர் 12:23 |
| கிறிஸ்துவின் மனைவி | : | எபேசியர்5:21-32 |
| கிறிஸ்துவின் சரீரம் | : | எபேசியர் 1:18:24 |
| கிறிஸ்துவின் சபைகள் | : | ரோமர் 16:16 |
| சபை | : | எபேசி 3:10 |

## அந்த சபையானது :

| | | |
|---|---|---|
| கிறிஸ்துவால் கட்டப்பட்டது | : | மத் 16:13 - 18 |
| கிறிஸ்துவின் இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்டது | : | அப் 20:28 |
| கிறிஸ்துவை அஸ்திபாரமாகக் கொண்டது | : | 1கொரி 3:11 |
| மனிதர்களை அஸ்திபாரமாகக் கொண்டதல்ல | : | 1கொரி 1:13-13; எபே 2:20-22 |
| கிறிஸ்து உயிர்த்தெழுந்த முதலாம் பெந்தகொஸ்தே தினத்தன்று முற்றாக ஸ்தாபிக்கப்பட்டது | : | லூக்கா 24:44 ; மாற் 9:1; அப் 1ம், 2ம் அதிகாரம் |

## கிறிஸ்துவின் சபையும் அவரது

சரீரமும் ஒன்றே : எபே 1:22 - 23; கொலே 1:18 ; 24

## அதன் அங்கத்தினர்கள் :

| | | |
|---|---|---|
| அவசியவங்கள் | : | 1கொரி 12:57 |
| சீசர்கள் | : | அப்6:1 |
| விசுவாசிகள் | : | அப்5:14; 2கொரி 6:15 |
| பரிசுத்தவான்கள் | : | அப் 9:13; பிலி 1:1 |
| ஆசாரியர் | : | 1பேது2:10; வெளி 1:5 |
| பிள்ளைகள் | : | 1யோவான் 3:1-2. |
| கிறிஸ்தவர்கள் | : | அப் 11:26 ; 1பேது 4:16; |

அப் 26:28 என்று அழைக்கப்படுகிறார்கள்.

## அந்த சபையின் மூன்று ஸ்திர பொறுப்புகள் :

**மூப்பர்:** இவர்கள் கண்காணிகள், பிஷப்கள், பாஸ்டர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் இவர்களது கடமை சபையை, கண்காணிப்பது : அப் 20:28;1தீமோ 3:1-7, தீத்து 1:5-9; 1பேதுரு 5:1-4

**உதவிக்காரர்:** சபைக்கு சேவிப்பதற்கு : 1தீமோ 3:8-13

**சுவிசேஷ ஊழியர் :** தீமோத்தேயுவிற்கும் தீத்துவிற்கும் எழுதிய நிருபங்கள்.

## கிறிஸ்து :

| | | |
|---|---|---|
| சபையை நேசித்தார் | : | எபே 5:25 |
| சபைக்காக இரத்தம் சிந்தினார் | : | அப் 20:28 |
| அதை ஸ்தாபித்தார் | : | மத் 16:18 |
| சபையை அவருடையது என்றார் | : | மத் 16:18 |
| மக்களை அதற்குள் சேர்த்துக் கொண்டார் | : | அப் 2:47 |
| அவரே அதன் தலைவர் | : | எபே 5:23; 4;4; 1:22 - 23 |
| அவரே அதை இரட்சிப்பவர் | : | எபே 5:23; 4:4; 1:22 - 23 |

## ஒரு மனிதனும் :

| | | |
|---|---|---|
| சபையை திட்டமிடவில்லை | : | எபே 3:10 - 11 |
| அதை சம்பாதிக்கவில்லை | : | அப் 20:28; எபே 5:25 |
| அதை கட்டவில்லை | : | மத் 16:18 |
| அங்கத்தவருக்கு பெயரிடவில்லை | : | ஏசாயா 62:2 |
| சபைக்கு உபதேசத்தை கொடுக்கவில்லை | : | கலா 1:11; 2 யோவான் 9-10 |

## புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் :

கிறிஸ்துவிற்கு ஒரே ராஜ்யம் இருந்தது : எபே: 3:15

கிறிஸ்துவிற்கு ஒரே சரீரம் இருந்தது : கொலோ 1:13 - 14

கிறிஸ்துவிற்கு ஒரே மணவாட்டி இருக்கிறது : எபே 5:22-32; ரோமர் 7:1-7

கிறிஸ்துவிற்கு ஒரே சபை இருக்கிறது : மத்: 16 ; 18; எபே 1:22 - 23 ; 4:4

## சபைக்குள் பிரவேசிப்பதற்கு :

சுவிசேஷத்தை கேள்விப்பட வேண்டும் : ரோ 10:17
கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் : யோ 8 : 24; அப் 10 : 31; எபி 11 : 6
பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் : லூக் 12 : 3 அப் 2 : 38; 17 : 30
விசுவாசத்தை வாயினால் அறிக்கையிட வேண்டும் : மத் 10 : 32 – 23; ரோமர் 10 : 10
ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் : மத் 28 :19; மாற் 16 : 16; அப் 2: 38; 10:48 ; 22:16 ; 1பேதுரு 3 : 21; கலா 3: 27

## ஞானஸ்நானத்திற்கு :

தண்ணீர் அவசியம் : அப் 10 : 47
தண்ணீர் அதிகமாக அவசியம் : யோவான் 3:23
தண்ணீருக்குள் போகுதல் : அப் 8:38 ; மத் 3: 5-6
தண்ணீரில் அடக்கம் பண்ணப்படல் அவசியம் : ரோமர் 6: 3-5; கொலோ 2 : 16
தண்ணீரில் கழுவப்படல் அவசியம் : அப் 22 : 16
தண்ணீரிலிருந்து எழும்புதல் அவசியம் : கொலோ 2 : 12
தண்ணீரிலிருந்து வெளியேற்றுதல் அவசியம் : 8 : 39
தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறத்தல் அவசியம் : யோவான் 3 : 5

## ஞானஸ்நானத்திற்குள்:

உங்கள் பாவங்கள் கழுவப்படுகின்றன : அப் 22 : 16.
நீங்கள் பாவத்திலிருந்து மீட்கப்படுகிறீர்கள் : 1பேதுரு 3 : 21; மாற்கு 16 : 16.
உங்களுக்கு பாவமன்னிப்புக் கிடைக்கிறது : அப் 2 : 38
நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளாகிறீர்கள் : கலா 3 : 27
நீங்கள் சபைக்குள்ளாகிறீர்கள் : அப் 2 : 37 – 47
நீங்கள் கிறிஸ்துவை தரித்துக்கொள்கிறீர்கள் : கலா 3 : 27
நீங்கள் புதிதாகுகிறீர்கள் : ரோமர் 6 : 3-5
நீங்கள் கீழ்ப்படிகிறீர்கள் : அப் 10 : 48 ; 2 தெச 1: 7-9

## கிறிஸ்துவிற்கு உண்மையான சபை :

| | | |
|---|---|---|
| ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுதல் வேண்டும் | : | யோவான் 4 : 23 |
| வாரத்தின் முதல்நாள்தோறும் கூடிவரல் வேண்டும் | : | அப் 20 : 7 |
| துதி பாடல் வேண்டும் (இசைக்கருவி உதவியின்றி) | : | எபே 5 :19 கொலோ 3 : 16 |
| ஜெபித்தல் வேண்டும் | : | அப் 2 : 42; 1தீமோ 2:1-2 |
| ஒருவருக்கொருவர் புத்திசொல்லல் வேண்டும் | : | 1 கொரி 14 : 15 – 27 |
| வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறல் வேண்டும் | : | அப் 20 : 7; எபி 10 : 26 |
| வாரத்தின் முதல் நாள்தோறும் காணிக்கை கொடுத்தல் வேண்டும் | : | 1கொரி 16 : 1-2; 2 கொரி 9:9 |

## அந்த உண்மை சபை இன்றும் :

* உங்கள் சமுதாயத்திலிருக்கிறது; தேவ வசனத்தால் வழிநடத்தப்படுகிறது; அது ஒரு பிரிவல்ல; அதுவே கிறிஸ்துவின் ஒரே சபை.
* அது இன்றும் புதிய ஏற்பாட்டு மாதிரியைப் பின் பற்றுகிறது.
* அது சத்தியத்திலும், போதனையிலும் ஒன்றாயிருக்கிறது.
* சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதால் அங்கத்தினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.
* மனிதரின் ஆதிக்கமற்றது.
* அதன் அங்கத்தவர்கள் அதே பெயரைக் கொண்டவர்கள் – கிறிஸ்தவர்கள்.

## நீங்களும் அதன் அங்கத்தினராக முடியும் :

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்திலுள்ள உதாரணங்களைப் பின்பற்றி, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதனால்...

மேலும் விபரங்களுக்கு :- 92 44 21 44 2 1, 92 44 31 44 31

பாடம் 1

# ஸ்தேவான்

## ( சாவிலும் சத்திய வழியில் நின்றவன் )

சிறுவர் பகுதி

கடவுளின் செல்லப் பிள்ளைகளே,

உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். நீங்கள் எல்லாரும் சந்தோஷமாக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

இப்பொழுது நீங்கள் ஸ்தேவான் என்ற அண்ணனைப் பற்றி தெரிந்துகொள்ளப் போகிறீர்கள். இவர் யார் தெரியுமா? இந்த அண்ணன் வாலிப வயதினில் வசனத்தை கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கபட்டவர். எருசலேம் கிறிஸ்துவின் சபையில் நற்சாட்சி (நல்ல முன்மாதிரியான வாழ்க்கை வாழ்வதினால்) பெற்றவராக இருந்தார். அது மாத்திரமில்லாமல், அந்த சபையில் உதவிக்காரனாக இருந்து பணி செய்து, சபைக்கு மிகவும் உதவியாக இருந்தார்.



அவருக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் வரத்தினாலே பெரிய அற்புதங்களயும் அடையாளங்களையும் செய்தார். மேலும், ஒருமுறை அவர் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவைப் பற்றி ஜனங்களுக்கு சொல்லும்போது, கடவுளுக்கு எதிராக செயல்படும் சில பேர் ஸ்தேவான் அண்ணனை எதிர்த்து தர்க்கம் செய்தார்கள். தேவன் கொடுத்த ஞானம் அவருக்கு இருந்தபடியால், அவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை.

ஆகையினால் அந்த நபர்கள் ஸ்தேவான் அண்ணனை, ஆலோசனை சங்கத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். அவர்களுக்கும் இயேசுகிறிஸ்துவைப் பற்றி போதித்தார். அதை ஏற்றுக்கொள்ளாத அந்த கூட்டத்தார் அனைவரும் என்ன செய்தார்கள் தெரியுமா? ஸ்தேவான் அண்ணனை கல்லெறிந்து கொன்று போட்டார்கள். சாகுற வேளையிலும் சத்திய வசனம் போதிக்கிறபடி, தன்னை துன்பபடுத்தினவர்களை தேவன் மன்னிக்கும்படி ஜெபித்துக்கொண்டே மரித்தார்.

பார்த்தீங்களா? இந்த ஸ்தேவான் அண்ணன் சத்தியத்தின் மீது எவ்வளவு அன்பும் வைராக்கியமும் இருந்தால், அதை போதித்தார் மற்றும் அதை போதித்ததினால் உயிரையும் இழந்தார்; மேலும் உயிரை இழக்கும் போதும்கூட சத்தியம் சொன்னபடி மன்னித்தார். இவ்வளவு கஷ்டத்திலும் இயேசுவை விட்டு அவர் பின்வாங்கவில்லை. பிள்ளைகளா, நீங்களும் இந்த அண்ணனைப் போல இயேசுவுக்காக, சத்தியத்திற்காக உண்மையாக வாழ்வீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனன வசனம் :** வெளி 2:10 'நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்'

– உங்கள் அண்ணன் அன்பு ஏசுதாஸ்

---

பாடம் 2

# யெரோபெயாம்

## (மக்களை தவறாக வழிநடத்திய தலைவன்)

ஹாய் குட்டீஸ்!

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் வாழ்த்துக்கள். புது பள்ளிக்கூடம், புது நண்பர்கள், புது வகுப்புகள் என்று சந்தோஷமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். எல்லா இடங்களிலும் தேவனுக்கு பயந்து ஞானமாய் நடந்துகொள்ளும்படி வாழ்த்துகிறேன்.

சாலமோன் ராஜாவின் ஆட்சிக்காலத்திற்கு பின்பு இஸ்ரவேல் ராஜ்ஜியம், தாவீதன் பேரனும், சாலமோனின் மகனுமாகிய ரெகோபெயாமின் மதியீனமான செயலால் இரண்டாக பிரிந்தது. ஒன்று 2 கோத்திரங்களை கொண்ட, எருசலேமை தலைநகராக கொண்ட தெற்கு ராஜ்ஜியம். இதற்கு ரெகோபெயாம் அரசனாக இருந்தான். மற்றொன்று வடக்கே சமாரியாவை தலைநகராக கொண்ட இஸ்ரவேல் ராஜ்ஜியம். இதற்கு சாலமோனின் வேலைக்காரனான யெரோபெயாம் என்பவன் அரசனாக இருந்தான்.

தேவனுடைய தயவினால், அகியா என்னும் தீர்க்கதரிசி சொன்ன காத்தருடைய

வார்த்தையின்படியே யெரோபெயாம் இஸ்ரவேல் ராஜ்ஜியத்திற்கு அரசனானான். யூதர்கள் அனைவருக்கும் வருடத்தில் 3 முறை கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாட எருசலேம் செல்ல வேண்டும் என்பது தேவனுடைய தாசனாகிய மோசேயின் மூலமாக அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை.

பண்டிகை நாட்கள் நெருங்கின போது, யெரோபெயாம் தன் பதவியையும், தன் உயிரையும் தக்கவைக்க, தந்திரமாக யோசனை செய்தான். சாதாண வேலைக்காரனான தன்னை, இஸ்ரவேலின் 10 கோத்திரங்களை ஆளும்படியாக ராஜாவாக அபிஷேகம் செய்த தேவனையும், அவரது தயவையும் மறந்து, இரண்டு பொன் கன்றுகுட்டிகளை செய்து, ஒன்றை பெத்தேல் என்ற இடத்திலும், மற்றொன்றை தாண் என்ற இடத்திலும் நிறுவினான். அதுமட்டுமா ? அதற்கு பலிபீடங்களை கட்டி, ஜனத்தில் மோசமானவர்களை ஆசாரியர்களாக்கி, கர்த்தருக்கு கொண்டாட வேண்டிய பண்டிகையை, கன்றுகுட்டிக்கு செய்ய வைத்தான். அதனால் கர்த்தருடைய கோபம் அவன் மேலும், அவன் சந்ததிமேலும் வந்து, அவர்கள் அனைவரும் அழிந்துப்போயினர்.

குட்டீஸ் ! தேவன் யெரோபெயாமுக்கு செய்த தயவை அவன் மறந்து, தேவன் தன்னிடம் தந்த ஜனங்களை



பாவம் செய்த வைத்தப்படியினால், தானும் தன் குடும்பமும் அழிவதற்கு காரணமானான். ஆகையால், சாபத்திற்கும் அழிவிற்கும் காரணமான சிலைகளை நாமும் வணங்கக்கூடாது, மற்றவர் வணங்க காரணமாகவும் இருக்கக்கூடாது. நீங்க எல்லாரும் கர்த்தரை மட்டும் வணங்குகிற நல்ல பிள்ளைங்களாக இருப்பீங்கதானே? இருந்தால், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்! பாதுகாப்பார்!

**மனன வசனம் : யாத்திராகமம் 20:4,5** “மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் ; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் ;”

– துயினி பிரதீப்

**சென்ற மாதம் பெயர் விடுபட்டவர்கள்**

1. G. ஏஞ்சலம்மாள் – வளர் நகர்
2. J. விஜய் – வளர் நகர்
3. A. ரோஸ்மேரி – சென்னை
4. S. பாக்கிய ராஜம் – மதுரை

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : *92 4421 4421 & 92 4431 4431)* ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 08842363722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 09844070763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 09810896789)

# ஜூலை மாத கேள்விகள்

1. வாசல் விரிவும், வழி விசாலமுமான பாதையின் முடிவு என்ன?
2. நியாயப்பிரமாணத்தினாலே நீதிமான்களாக விரும்புகிறவர்கள் என்ன ஆவார்கள்?
3. சட்டத்திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தன் மாம்சத்தினாலே ஒழித்தவர் யார்?
4. பவுல், வேறொரு சுவிசேத்தினை பிரசங்கிக்கிறவனை எப்படிப்பட்டவன் என்கிறார்?
5. கிருபையும் சத்தியமும் யார் மூலம் உண்டாயின?
6. நியாயப்பிரமாண சாபத்திற்கு நீங்கலாக்கி நம்மை மீட்டவர் யார்?
7. நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் உடையவர் யார்?
8. வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் உடையவர் யார்?
9. எங்கே நின்று, எதை விசாரித்து, எதிலே நடந்தால் ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்?
10. ஜீவனுக்கு போகிற வாசலும், வழியும் எப்படிபட்டது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-08-2017**

**அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. பேபி ராஜா**
**45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,**
**அரசரடி, மதுரை - 625 016**
**செல்: 92 4421 4421, 92 4431 4431**

## சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. சங் 33:11 | 2. மல்கியா 2:15 |
| 3. மத் 13:22 | 4. ரோமர் 1:19 |
| 5. யாக் 1 : 5 | 6. நீதி 14:22 |
| 7. II தீமோ 3:16,17 | 8. I பேதுரு 2:21 |
| 9. எபி 10:1 | 10. கலா 3:24 |

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
2. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
3. J. மாலதி ஜெயசெல்வம் – சீர்காழி
4. R. சரோஜா – தென்கலம்
5. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
6. R. ஜெயராஜ் செல்வி – நாமக்கல்
7. G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
8. D. நேசமணி – நாமக்கல்
9. J. விஜய் – வளர்நகர்
10. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
11. Mrs. ராஜம்மாள் – திருப்பூர்
12. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
13. J. ஜான்ஸி – ஆனைமலை
14. T. கஸ்தூரி ஜெயபாலன் – ஆண்டிபட்டி
15. A. கேரோனா எலிசபெத் – சென்னை
16. J. ஜோசப் – கோவில்பட்டி
17. Mrs. ரூபாவதி நோபிள் – நெல்லை
18. Mrs. லில்லி ஆர்பர்ட் – நெல்லை
19. Mrs. S. செல்வி ஜான் ரோஸ் – நாகர்கோவில்
20. Sis. லில்லி புஸ்பம் – தூத்துக்குடி
21. ஹெப்ஸி தாமஸ் – பப்பை
22. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
23. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
24. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
25. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
26. Mrs. மேரி ராஜ் – மதுரை
27. Mrs. ஞான சிரோன்மணி – சமயநல்லூர்
28. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
29. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
30. G. அப்பல்லோ ராஜ் – மதுரை
31. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
32. Mrs. மெர்ஸி ஸ்டான்லி – கோவை
33. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
34. D. குளோரி திலகவதி – ஈரோடு
35. Mrs. ஆலிவ் தேவதாஸ் – சென்னை
36. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
37. Mrs. ஹெலன் திலக் – மதுரை
38. S. குளோரி வசந்தா – நெல்லை
39. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
40. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
41. Mrs. மெர்ஸி ரூபஸ் – சேலம்
42. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
43. Mrs. ஜெயசீலி ஜெயக்கொடி – திருச்சி
44. J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் – மதுரை
45. A. ரோஸ்மேரி – சென்னை
46. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
47. M. தேவசகாயம் ரவி – குன்னூர்
48. R. ஷீலா – குன்னூர்
49. B. தனூஸ் – குன்னூர்
50. R. அனிதா மார்கரேட் – குன்னூர்
51. M. லதா – சென்னை
52. கிறிஸ்டி ஜோசப் – திருவள்ளூர்
53. S. பாக்கியராஜம் – மதுரை

தொடர்ந்து இப்பகுதியில் பங்கு பெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# கிருபையுள்ள வார்த்தை

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22


**Vol - 18** | **July ஜூலை** | **2017**

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE**    ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


இரண்டு வழிகள் 3

கிறிஸ்துவின் பிரமாணம் 5

எசேக்கியேல் 8

நீங்கள் அறியவேண்டிய.. 10

சிறுவர் பகுதி 12



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை

**6** மணி முதல் **6-30** மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.









Advanced Bible Correspondence Courses Available in English.

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**

P.O.Box 15, Arasaradi,

Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

**நித்திய வழியில் நடத்தும் சத்திய வார்த்தை**

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.91

## சென்ற மாதம் நடைபெற்ற ஊழியங்களில் சில...





திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற பார்வையற்றோர் முகாம்.



பார்வையற்றோருக்கான தலைமைத்துவ
வகுப்பில் பங்குபெற்றோர்...



மாதந்தோறும் பார்வையற்றோருக்கு
அரிசி வழங்கப்படுகிறது...

## புதிய ஏற்பாட்டு முறையில்...

**பரலோக தேவனை சுதந்திரமாக எங்களுடன் தொழுதுகொள்ள அன்புடன் அழைக்கின்றோம் !**

| | |
|---|---|
| அரசரடியில்...<br>இரயில்வே ஜங்ஷன் அருகில்<br>தொடர்புக்கு : ஊழியர் V. கிங்ஸ்லி ராஜா<br>செல் : 92 4421 4421 | ஒத்தக்கடையில்...<br>High Court Bench அருகில்<br>தொடர்புக்கு : ஊழியர் R. ஆண்டனி ராஜா<br>செல் : 92 4431 4431 |
| திருவாதவூரில்...<br>சமத்துவபுரம் அருகில்<br>தொடர்புக்கு : ஊழியர் S. அன்பு ஏசுதாஸ்<br>செல் : 94 87 86 86 86 | ஆரப்பாளையத்தில்...<br>பேருந்து நிலையம் அருகில்<br>தொடர்புக்கு : ஊழியர் P.C. பிலேமோன்ராஜா<br>செல் : 92 4421 4421 |
| கரூரில்...<br>வெங்கமேடு<br>தொடர்புக்கு : ஊழியர் C. முத்துக்குமரன்<br>செல் : 9842 336 776 | சக்கிமங்கலத்தில்...<br>அன்னை சத்தியா நகர்<br>தொடர்புக்கு : ஊழியர் A. யோபு தங்கராஜ்<br>செல் : 92 4431 4431 |

**உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துக்கொண்டு,**
**அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக** - மத்தேயு 4:10

Owned, Published & Edited by **P.C. PHILEMON RAJAH**
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th July 2017


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்










அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்







அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்





உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**


பைபிள் பாடங்களை முடித்தவர்களுக்கு சான்றிதழும் முழு வேதாகமும் பரிசளிக்கப்படுகிறது...


If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To